கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc.,LL.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**வழக்கிடை மனு எண்.3/2026**

**உள்**

**அசல் வழக்கு எண். 19/2007**

**----**

சந்திரபிரபாவதி -- மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நயாயினி (இறந்துவிட்டார்
2. ரவீந்திரன்
3. ராஜகுரு -- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 01.04.2026 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 20.04.2026 ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்க்கிசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.கல்பனாதேவி அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்துவந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

## உத்தரவு

இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்து சாட்சியமளிக்க தோதாக அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு சம்மன் அனுப்பி மலைப்பட்டி பஞ்சாயத்து கிளார்க் மூலமாக சம்மன் செய்து சாட்சியமளிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி, உ.வி.மு.ச. கட்டளை 16 விதி 2

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.04.28 19:40:23 +0530

மற்றும் சி.ஆர்.பி. கட்டளை 75–ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:

(1) தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் தாவா சொத்தை பொறுத்து முதலில் சுவாதீன பரிகாரம் கோரியிருந்ததாகவும், பின்பு தாவா சொத்து 2ம் பிரதிவாதியால் வாதி வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால், சுவாதீன பரிகாரத்தை நீக்கிவிட்டு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதாகவும், தாவா சொத்திற்கு வீட்டுவரி பதிவு வாதி பெயரில்தான் ஏற்பட்டு வாதி வீட்டுவரி செலுத்தி வருவதாகவும், ஆனால் அதனை 2ம் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையில் அவ்விதம் ஒப்படைக்கவில்லை என்றும் மறுப்பதாகவும், எனவே தாவா சொத்தினுடைய வீட்டுவரி பதிவு யார் பெயரில் உள்ளது எனவும், வீட்டுவரி பதிவு யாரிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்ற விபரங்களை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியது வாதியின் கடமை எனவும், எனவே அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக மலைப்பட்டி பஞ்சாயத்து கிளார்க் அவர்களை சம்மன் செய்து, அவர் மூலமாக தாவா சொத்துக்களுக்குரிய வீட்டுவரி பதிவேடு மற்றும் யார் பெயரில் வீட்டுவரி ஏற்பட்டுள்ளது என்பது சம்மந்தமான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்து சாட்சியமளிக்க தோதாக அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு சம்மன் அனுப்பி மலைபட்டி பஞ்சாயத்து கிளார்க் மூலமாக சம்மன் செய்து சாட்சியமளிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2<u>ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மறுப்புரையின் சுருக்கம்</u>:

(1) வாதி கூறியுள்ளதுபோல் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் தாவா சொத்து எக்காலத்திலும் வாதி வசம் ஒப்படைக்கப்படவில்லை எனவும், தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி நளாயினி என்பவரின் பெயரிலேயே வீட்டுவரி ரசீதானது ஏற்பட்டு, அவர் அனுபவித்து வந்த நிலையில், தபசில் சொத்தை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு கடந்த

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.28 19:40:29 +0530

14.12.2006ம் தேதியன்று இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து, அதிலிருந்து தபசில் சொத்தினை 3ம் பிரதிவாதியே முறையே அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி வீட்டுவரி மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும், அவரே வீட்டுவரி செலுத்தி வருவதாகவும் கூறிவரும் பட்சத்தில் தபசில் சொத்தை பொறுத்து நீதிமன்ற நடவடிக்கையானது நிலுவையில் இருந்து வரும் சூழ்நிலையில், மனுதாரர்/வாதிக்கு சாதகமாக இருக்கும் கிராம பஞ்சாயத்து ஊழியர்களை வைத்து மோசடியாக ரசீது ஏற்படுத்தி கொண்டு, அதன் பேரில் மேற்படி பஞ்சாயத்து கிளர்க் அவர்களை விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

(2) மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.14ல் கண்டுள்ள ரசீதுகள் அனைத்தும் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு மோசடியாக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர வழக்குக்கு முந்தைய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், அதனால் தற்போதுள்ள பஞ்சாயத்து கிளர்க் அவர்களை தபசில் சொத்திற்கு போடப்பட்டுள்ள ரசீது சம்பந்தமாக விசாரணை செய்யவேண்டியது அவசியமில்லை எனவும், வீண் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி மறுப்புரை தாக்கல்.

4. 3<u>ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மறுப்புரையின் சுருக்கம்</u>:

**(1)** மனுதாரர் மனுவில் தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் தாவா சொத்தை பொறுத்து முதலில் சுவாதீன பரிகாரம் கோரியிருந்ததாக கூறியிருப்பது ஒப்புக்கொள்ளப்படுவதாகவும், வாதி கூறியுள்ளது போல் 2ம் எதிர்மனுதாரரால் தாவா சொத்து எக்காலத்திலும் வாதி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி நளாயினி என்பவரின் பெயரிலேயே வீட்டுவரி ரசீதானது ஏற்பட்டு, அவர் அனுபவித்து வந்த நிலையில், தபசில் சொத்தை பொறுத்து 3ம்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.28 19:40:35 +0530

பிரதிவாதிக்கு கடந்த 14.12.2006 ம் தேதியன்று இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து, அதிலிருந்து தபசில் சொத்தினை 3 ம் பிரதிவாதியே முறையே அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி வீட்டுவரி மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும், அவரே வீட்டுவரி செலுத்தி வருவதாகவும் கூறிவரும் பட்சத்தில் தபசில் சொத்தை பொறுத்து நீதிமன்ற நடவடிக்கையானது நிலுவையில் இருந்து வரும் சூழ்நிலையில், மனுதாரர்/வாதிக்கு சாதகமாக இருக்கும் கிராம பஞ்சாயத்து ஊழியர்களை வைத்து மோசடியாக ரசீது ஏற்படுத்தி கொண்டு, அதன் பேரில் மேற்படி பஞ்சாயத்து கிளர்க் அவர்களை விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

(2) மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள ரசீதுகள் அனைத்தும் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு மோசடியாக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர வழக்குக்கு முந்தைய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், அதனால் தற்போதுள்ள பஞ்சாயத்து கிளர்க் அவர்களை தபசில் சொத்திற்கு போடப்பட்டுள்ள ரசீது சம்பந்தமாக விசாரணை செய்யவேண்டியது அவசியமில்லை எனவும், வீண் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி மறுப்புரை தாக்கல்.

5. <u>பிரச்சினை : –</u>

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்,**

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் பிராது, மனு மற்றும் 2, 3 ம் எதிர்மனுதாரர்கள்/ 2, 3 ம் பிரதிவாதிகளின் மறுப்புரைகள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.04.28 19:40:41 +0530

**7.** வழக்கு கோப்பை பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதி தாவா சொத்தை பொறுத்து, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த 14.12.2006ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.4450/2006 சட்டப்படி செல்லாது என்று விளம்புகை பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், மலைப்பட்டி பஞ்சாயத்து கிளார்க்குக்கு சம்மன் செய்து சாட்சியமளிக்க அனுமதி அளிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

8. மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கை முதலில் விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ள போது, 2010ம் வருடம் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை மனுதாரர்/வாதியிடம் ஒப்படைத்து விட்டதால், சுவாதீனப் பரிகாரத்தை நீக்கிவிட்டு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது மனுதாரர்/வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்யும் வகையில், தாவா சொத்திற்கு வீட்டுவரி ரசீது வாதியின் பெயரில்தான் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி வீட்டுவரி பதிவு யார் பெயரில் உள்ளது, யாரிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்ற விபரத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துரைத்து, மனுதாரர்/வாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்வதற்காக மலைப்பட்டி பஞ்சாயத்து கிளார்க்க்கு சாட்சி சம்மன் செய்து சாட்சியமளிக்க அனுமதி அளிக்க வேண்டியது அவசியம் என்றும், ஆகையால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

**9.** 2, 3ம் எதிர்மனுதாரர்கள்/2, 3ம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள், தாவா சொத்தை 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி எக்காலத்திலும் மனுதாரர்/வாதி வசம் ஒப்படைக்கவில்லை என்றும், 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி 14.12.2006ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்ததிலிருந்தே 3ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோதே மனுதாரர்/வாதி கிராம பஞ்சாயத்து கிளார்க்கை வைத்து மோசடியாக ரசீது ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்கு

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P Date: 2026.04.28 19:40:47 +0530

முந்தைய ரசீதுகள் எதுவும் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஆகையால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்கள்.

10. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட ரசீதுகளே தவிர வழக்கிற்கு முந்தைய ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று எடுத்துரைக்கப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில், வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்/வாதி கொடுத்துவிட்டதாக எடுத்துரைக்கப்பட்ட நிலையில், வழக்கிற்கு பின்புதான் மனுதாரர்/வாதி தாவா சொத்தின் அனுபவத்தை அடைந்ததால் அதற்கு பின்பு தான் மனுதாரர்/வாதி பெயரில் வீட்டுவரி ரசீதுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், அதற்கு முந்தைய ரசீதுகள் மனுதாரர்/வாதி பெயரில் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.** மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தாவா சொத்தை எக்காலத்திலும் மனுதாரர்/வாதி வசம் ஒப்படைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளதால், தாவா சொத்தில் மனுதாரர்/வாதியின் அனுபவத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரர்/வாதிக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனு அனுமதிக்கப்படுவதால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் உளமாற நிறைவடைகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை பற்றிய உத்தரவு இல்லை.

மேற்படி, உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் பகரப்பட்டது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.28 19:40:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> – இல்லை

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.28 19:40:58 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

-----------------------------------
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலைமனு எண்.3/2026
உள்
அ.வ.எண்.19/2007
சீரான/வரைவு உத்தரவு
நாள் – 28.04.2026.
-------------------------------------